★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85690

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 5உ செவ்வாய் (17—4—56) ★ ★ வெளியூர்: சித்திரை 6உ புதன் (18—4—56) [இதழ் 261

## வடநாட்டில் மேலும் ஒரு புதிய துறைமுகம்

கட்டாக், ஏப். 18—

ஒரிசா மாநிலத்தில் கட்டாக் நகரிலிருந்து 50 மைல் தொலைவில் உள்ள பிரதீப் என்ற இடத்தில் துறைமுகம் ஒன்று அமைக்கப்படும் என்று தெரியவருகிறது.

இந்த இடத்தை பெரியதொரு துறைமுகமாக உருவாக்குவது பற்றி பின்னர் முடிவெடுக்கப்படும் என்றும், இப்போது உடனடியாக சிறு துறைமுகம் உருவாக்க வேலை தொடங்கும் என்றும் இந்திய சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

# காமராசர் பாட்டுக்கு எதிர் பாட்டு

## 'விந்தியத்திற்குத் தெற்கில் கனரகத் தொழில்கள் நிறுவப்படவில்லை'

### 'தெற்கைச் சிறந்த தொழிற் பேட்டமாக்க முயலவேண்டும்'

### 'வெளிப்படையான தடைகளைக் கூறிடாதீர்'

### சர் சி. பி. இராமசாமி அய்யரின் ஏமாற்றமும்-விழைவும்

சென்னை, ஏப். 16—

" விந்தியத்திற்குத் தெற்கில், கனரகத் தொழில்களை நிர்மாணிக்க, எந்த ஒரு பகுதியும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இது, எனக்கு ஆழ்ந்த ஏமாற்றத்தைத் தருகிறது.

" வெளிப்படையாக இருந்துவரும் தடைகளை ஒரு பொருட்டாக மதிக்காது, தெற்கை ஓர் சிறந்தத் தொழில் பகுதியாக ஆக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்."

இவ்வாறு சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

" தெற்கில் கனரகத் தொழில்கள் நிறுவப்படாததுகண்டிக்கத் தக்கதாகும். இப்பெருந் தொழில்களை நிர்மாணிப்பதற்கு சென்னையை விட, பீகார், ஒரிசா, மைசூர் போன்ற பிரதேசங்கள் தகுதி வாய்ந்தவை என எண்ணப்படுகிறது. இங்கு நிலக்கரியோ அல்லது இரும்போ இல்லை என்பதில் சந்தேகமில்லை. அதன் காரணமாகத் தான், நான் திவானாக இருந்தகாலை, அரசாங்கப் பணத்தைப் பெரும் அளவில் செலவிட்டு, அலுமினியத் தொழிலைத் துவங்க வலியுறுத்தினேன் "

என்று சர்.சி.பி ஆர். குரோம்பேட்டையில் நிறுவப்பட்டிருக்கும் சென்னை இயந்திர நுணுக்கக் கலைப்பயிற்சிப் பள்ளியின் தினவிழாவில் பேசும் பொழுது அறிவித்தார்.

ஆரம்ப இக்கட்டுகளை எல்லாம் தாண்டி நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி எடுப்பது வெற்றிகரமாக முடிய வேண்டுமெனத் தாம் விரும்புவதாகவும், அப்பழுப்பு நிலக் (4-ம் பக்கம் பார்க்க

## ஏமாற்றி விட்டார் எத்தர்!

### தமிழரைத் தவிக்க விட்டார் நாட்டின் நாயகர்!

மாநில புதுஅமைப்பு மசோதாவின் அடிப்படை அம்சங்களை எதிர்க்காத சட்டசபைகளின் ஒருமனதான சிபாரிசுகளை டேல்லி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் என்று செய்தி கிடைத்திருக்கிறது.

உதாரணமாக, ஆந்திர சட்டசபை ஒரு மேல் (சட்ட) சபை வேண்டும் என்று கேட்டிருப்பது; தனி உயர்நீதி மன்றம் வேண்டுமென பம்பாய் கோரியிருப்பது போன்ற சிபாரிசுகள் ஏற்றுக் கொள்ளப்படுமாம்.

அப்படியானால் சென்னைக்கு 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டுமென சென்னை சட்ட சபை ஒருமனதாகத் தீர்மானித்திருக்குமானால், டெல்லி ஏற்றுக் கொண்டிருக்கக் கூடும்.

இதனைக் கூடச் செய்யாது ஒழிந்தனர்—தமிழர்களைத் தவிக்க விட்டனர்—ஏமாற்றினர்—இங்குள்ள எத்தர்கள்! தாசர்புத்தி தலைக்கேறிய தருக்கர்கள்! காங்கிரஸ் கைகாட்டிகள்!

## சனாதன சம்பிரதாயத்திற்கு எதிராகக் கிளர்ச்சி

### அறப்போர்ப் படைக்கு அமைச்சர் தலைமை தாங்குவார்

காசி விசுவநாதர் ஆலயத்திற்குள் தாழ்த்தப்பட்டோர் நுழையக் கூடாதென்ற 'சனாதன' சம்பிரதாயத்தை எதிர்த்து, ஏப். 22-ம் தேதி அன்று 'அறப்போர்' நடைபெறும் எனத் தெரிகிறது.

அன்று, 'சத்தியாக்கிரகி'களை அழைத்துக்கொண்டு, மத்திய செய்திப் போக்கு-வரத்துத் துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம், கோயிலுக்குள் நுழைவார் எனத் தெரிகிறது.

இந்தத் தாழ்த்தப்பட்டோர் ஆலய நுழைவுக் கிளர்ச்சி நடைபெறும் அன்றையத் தினத்தில், காசிநகரில், டாக்டர் இராசேந்திரப் பிரசாத், லால்பகதூர் சாஸ்திரி, உ. பி. முதல் மந்திரி சம்பூர்ணானந்த் ஆகியோரும் தங்கியிருப்பாராம்—வேறு சொந்தக் காரியங்களைக் கவனிப்பதற்காக!

## ஏகாதிபத்தியம் புரியும் படுகொலை!

### விடுதலைக் கிளர்ச்சியை அடக்க வீண் முயற்சி

அல்ஜீரியா, ஏப். 15—

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் இராணுவ பலம் முழுவதையும் திரட்டி அல்ஜீரியா விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க முற்பட்டிருக்கிறார்கள் அல்லவா?

அந்த வீண் முயற்சியின்போது 188 பேர்களை; நேற்று முன்தினம் படுகொலை புரிந்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கும் தீவிரவாதிகளை வேட்டையாடுவதில் பிரெஞ்சு இராணுவத்தினர் நாளுக்கு நாள் தீவிரம் காட்டிவருகின்றனர்.

**இராணுவச் செலவுக்கு மேலும் 11,000 கோடி பிராங்குகள்!**

1956-ம் ஆண்டு இராணுவச் செலவுக்கு அதிகப்படியாக 11,000 கோடி பிராங்குகள் (பிரெஞ்சு நாணயம்) ஒதுக்குவதற்கு பிரெஞ்சு அரசியலார் உடன்பட்டிருக்கின்றனராம்; இதில் பெரும் பகுதி, அல்ஜீரியாவின் இராணுவச் செலவில் ஈடுபடுத்தப்படுமாம்.

**ஐ.நா. சபையில் அல்ஜீரியா பிரச்சினை எழும்?**

அல்ஜீரியாவில் இப்போதுள்ள நிலைமை உலக சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிர்வகித்து வருவதற்கு அபாயமுண்டாக்கக்கூடியதாக இருக்கிறதென்று 16 ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள், ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு கடிதங்கள் அனுப்பியுள்ளனவாம்.

# இந்தி மொழித் திணிப்பு: அவினாசி-தாண்டன் மோதல்!

## '10 கோடி மக்கள் மீது பலவந்தமாக இந்தியைத் திணிக்காதீர்'

### 'இந்திய ஒற்றுமைக்கு அவர்களே பகைவராவர்'

'இந்தியின் காலத்தை அம்மொழி பேசாத மக்கள்தான் வரையறுக்க வேண்டும்'

### மக்கள் சபையில் அவினாசிலிங்கம் அறிவிப்பு

' நாம் தேசிய மொழியை உருவாக்க முயற்சிக்கும் பொழுது, அதன் காரணமாக, நாம் பத்து கோடி மக்களை நெருக்கக்கூடாது. அத்தகையக் கருத்துக்கொண்டிருக்கிறவர்கள்தான் இந்திய ஒற்றுமைக்குப் பகைவர்களாவர்.

" தெற்கிலிருக்கும் நாங்கள், இந்தியைப் படித்துக்கொள்கிறோம் எனக்கூறியிருக்கிறோம்; ஆனால், அதை எங்கள்மீது வலுக்கட்டாயமாக திணிக்க முன்வருவீர்களானால், அதனுடைய கேட்டினால் தெற்கிலிருக்கிறவர்களை மட்டுமேயல்லாது, வங்கம் மற்றும் இதர மேற்குப் பகுதியில் இருக்கும் பெரும்பாலான மக்களும் பாதிக்கப்படுவர். எனவே, இந்தி மொழியின் காலத்தை, இந்தி பேசும் மக்களுக்குப் பதிலாக, இந்தி பேசாத மக்களே வரையறுக்க வேண்டும்."

இக்கருத்தை மக்கள் சபையில் கூறிய அவினாசிலிங்கம் அவர்கள், புருஷோத்தமதாஸ் தாண்டன் இந்தி மொழி வெறிகொண்டு, அடுத்தடுத்துப் போட்டுவரும் கூச்சலைக் குறிப்பிட்டார்.

## போட்டிப் பரிசுகள் தடைச் சட்டம்

### அமுலாகுவதை நிறுத்தி வைக்க சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடில்லி, ஏப். 16—

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போட்டிப் பரிசுகள் தடைச்சட்டம் ஜீவாதார உரிமைகளைப் பாதிப்பதாயிருக்கிறதென்று மறுத்து 'சுப்ரீம் கோர்ட்'டில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு முடிவடையும் வரையில் சட்ட அமுலை நிறுத்தி வைக்கும்படி 'சுப்ரீம் கோர்ட்' உத்தரவிட்டுள்ளது.

இரண்டாவது திட்டகாலத்தில், சிறு தொழில்களுக்கு நிதி உதவி அளித்து வருவதற்காக இந்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு மொத்தம் சுமார் ரூ. 20 கோடி கொடுக்க உத்தேசித்துள்ளனர்.

## 'இந்தி ஆட்சி மொழியாகும் காலம் அரசியல் சட்டத்தில் இருக்கிறது'

### 'அக்காலத்தைத் திருத்தும் பொறுப்பை இந்தி பேசாதவர்களிடம் விடக்கூடாது'

'ரோமன்எண்கூடாது;தேவநாகரிஎண்களே வேண்டும்'

### புருஷோத்தம தாஸ் தாண்டன் காட்டுக்கூச்சல்

" ஆங்கில மொழியின் இடத்தை எப்பொழுது இந்தி பெறுவது என்பதற்கான காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பை இந்தி பேசாத மக்களிடம் விடக்கூடாது. அதற்கான ஏற்பாடு அரசியல் சட்டத்தில் விளக்கமாக இருக்கிறது."

" இந்தி டைப்ரைட்டர் பொறியில், இந்தி எண்களுக்குப் பதிலாக உரோமன் எண்களுக்கு ஏற்பாடு செய்திருப்பதை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன். அதை நீக்கி, தேவநாகிரி எண்களைத் தான் கல்வித்துறை அமைச்சு ஏற்பாடு செய்யவேண்டும்.

" உரோமன் எண்களில் கல்வி அமைச்சர் கொண்டிருக்கும் சாதனை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை!

" இந்தி மொழியை வளர்ப்பதற்காகவும், திணிப்பதற்காகவும் ஒரு தனியான இந்தி அமைச்சரை நியமிக்க வேண்டும். இந்தி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. கழக இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—4—'56 செவ்வாய்

# வீழ்க 'கங்காணிகள்'!

சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியில் ஐந்து நாட்கள்வரை சுற்றுப்பயணம் செய்திருக்கிறார் முதலமைச்சர் காமராசர் அவர்கள். அந்த ஐந்து நாட்களில் நானூறு மைல் தொலைவு வரையிலும் பிரயாணம் செய்திருக்கிறார். நாள் ஒன்றுக்குச் சராசரி பத்து நிகழ்ச்சிகள் வீதம், ஐம்பது நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் கலந்துகொண்டு, பயனுள்ள 'விளக்கவுரை'களைத் தந்துள்ளார்!

அவரைப் பொறுத்தவரையில், இது ஒரு மகத்தான சாதனைதான். அவரைப்போல் இருந்தால் அல்லவா, மற்றவர்களால், இதுபோன்ற செயற்கரும் பணிகளைப் புரிந்திருக்க முடியும்!

அந்த ஐந்து நாட்களில் மேலும் கூடுதலான கற்கள் தொலைவு, அவர் பிரயாணம் செய்திருந்தாலும், ஐம்பது நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக அதிகப்படியான நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டபோதிலும், அவருக்கு என்ன நஷ்டம்? கைப்பணத்தைக் கொண்டா, அவர் மேற்கொண்ட பிரயாணச் செலவை ஈடு செய்யப் போகிறார்? நம்போன்ற ஏழைகள் அழுகிற வரிப் பணம் அவருடைய பிரயாணச் செலவிற்குக்கூட பயன்படவில்லை என்றால், வேறு, அது எந்த நல்ல காரியத்திற்குத்தான் பயன்படப்போகிறது?

எத்தனை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டால்தான் என்ன? சிக்கலான விஷயங்களைப் பொதுமக்களுக்கு விளக்கிடவும், புதுப்புதுத் தெளிவுரைகளைத் தந்திடவுமா, இவர் முயலப்போகிறார்? இளம்பிள்ளைபோல, வாந்தியெடுத்ததையே வாந்தியெடுத்துக் கொண்டு இருப்பதற்கு, இந்த முதலமைச்சருக்கு என்ன கைக்கப் போகிறதா? அல்லது புளிக்கத்தான் போகிறதா?

சென்ற ஐந்து நாட்களில் தாம் கலந்துகொண்ட ஐம்பது நிகழ்ச்சிகளில், மூன்றே மூன்று பொன்னான பொருட்களை திரும்பத் திரும்பக் கக்கி இருக்கிறார் முதலமைச்சர். அவைகளில் அறிவும இல்லை; பொருட்செறிவும் இல்லை! எல்லாம் பழைய சாக்கடைதான்!

“சிறிய கிளர்ச்சியை செய்து, தியாகிகள் எனப் பெயரெடுத்து, அதிகாரத்தைப் பெற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முயலுகின்றனர்;

“தனித் தமிழ் நாடு கோருவதற்கான விளக்கத்தை அவர்கள் சொல்லவில்லை; எனவே, தங்களைத் தென்னகக் 'குட்டி நேரு' எனக் கூறிக்கொள்வதற்கே, அவர்கள் தனித் தமிழ் நாடு கோருகின்றனர் என்றே கொள்ள வேண்டும்;

“வட இந்திய கங்காணி என என்னை ஏன் அவர்கள் அழைக்கின்றனர் என்பது எனக்கு விளங்கவில்லை; அக்கங்காணித் தொழிலை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தலைமுறை தலைமுறையாக அவர்கள் செய்துவரவில்லையா?

மேல் எழுதிக் காட்டியுள்ள மூன்று பொன்னான கருத்துக்களைத்தான், முதலமைச்சர், சேலம் மாவட்டத்தில் தாம் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் அனைத்திலும் சொல்லிச் சொல்லி, அவைகளை மனப்பாடம் செய்துக் கொண்டு இருக்கிறார். அரசியல் கங்காணிப் பணிக்கு அத்தகைய மனப்பாடம் மிக மிக அவசியம் என்பதைத் தெரிந்து அவர் நடந்து கொண்டிருப்பதற்காக, தமிழ் மக்கள் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கள்வன் ஒருவன் மனித நடமாட்டமற்றத் தனிக் காட்டில் செல்லும் நேரத்திலும் கூட, மெல்லிய காற்றில் உராய்ந்து எழும்பும் துல்லியமான ஒலியைக் கேட்டும் திடுக்கிடுவான்; சுற்றும் முற்றும் பார்த்து மிரளுவான் என்பது உளநூல் உண்மை. அதைப்போன்றுதான், அதற்குரிய தகுதியோ திறமையோ இல்லாது அதிகாரத்தில் ஏறி இருப்பவர்களும், அளவில் கூடி இருந்தாலும் குறைந்து இருந்தாலும், எதிர்ப்பென்றாலே உள்ளம் பதைப்பர்; உடல் வியர்ப்பர்! அதே நிலையில்தான் இன்று முதலமைச்சர் காமராசர் அவர்களும் இருக்கிறார். எனவேதான், அவர் ஏளனமாகக் கூறுகிறபடியே, நமது கழகத் தலைவர்கள் செய்திருக்கும் 'சிறு தியாக'மும் கூட, காமராசர் அவர்களை விரட்டவும், அவ்விடத்தைக் கைப்பற்றவும் நமது தலைவர்களுக்கும் எங்கு அரிய வாய்ப்பாகி விடுகிறதோ என்று அச்சம் கொண்டு அவதிப்படும் நிலை பெற்றிருக்கிறார் காமராசர்!

எதன் விளைவாக காமராசர் அவர்கள், இன்று அவர் பெற்றுள்ள அதிகாரத்தில் வீற்றிருக்கிறார்? கல்வி நிலையினாலா? வாய்த்துள்ள நுண்ணறிவினாலா? குறிப்பிட்டத் துறையில் பெற்றுள்ள நிபுணத்துவத்தாலா? ஆளும் அருந்திறன் அவரிடம் மட்டுமே மிதமிஞ்சி இருக்கிறது என்ற தன்மையினாலா? அவ்வுயர் தகுதிகளில் ஒன்றைக்கூட காமராசர் கேட்டறியாரே?

பின் எவ்வாறு அவர், அதிகாரத்தில் உட்கார்ந்து, ஆள் விரட்டி சேவகம் செய்து வருகிறார்?

'பெரும் பெரும் கிளர்ச்சி'களைச் செய்ததினாலும், 'உலகளவு பரந்தத்தியாகவடுக்களை'ப் பெற்றதினாலும் அல்லவா, கனமாகும் உயர்நிலை, நிரட்சரகுட்சியான காமராசர் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது? அத்தியாகத் தழும்புதானே, கொலு மண்டபத்திற்குள் நுழையும் அரிய பேற்றினை, அதற்கு வேண்டத்தகும் நிலைகள் அனைத்தும் அவரிடம் மருந்துக்கும் இல்லாது இருந்தும கூட, காமராசர் அவர்களுக்குக் கைவல்லியமாக்கிற்று? எனவேதான் 'தியாகம்' என்றால், அவர் கூறுகிறபடி, 'சிறிய கிளர்ச்சி' மூலம் நிகழ்வதானாலும், பெரிய கிளர்ச்சி மூலம் நேருவதானாலும், காமராசர் அவர்கள், கதிகலங்கும் நிலையைத் தாமாகவே எய்துகிறார். அறிவு அவருக்கு இருக்கும்பட்சத்தில் அதுவும் நிலைகுலையும் அளவிற்கு—அவர் பிதற்றக் கிளம்புகிறார்!

அடுத்தபடி, தமிழ் நாடு என நாம் கேட்கிறோம் எனக்கூறி புரிந்து கொள்ளாதவர்போல் நமது கோரிக்கையையே திரித்துக்கூறி, நாம் அக்கோரிக்கைக்குரிய புனித காரணங்களை விளக்கிக் கூறுது இருப்பது போலும் பொய் புகன்று, நேரு போன்று நாம் நம்மை 'தென்னாட்டு நேருகள்' எனத் தம்பட்டம் அடித்துக் கொள்வதற்காகவே, தனிநாடு கோருகிறோம் என்று, தமது கல்லா கயமையின் கீழ்த்தனத்தைப் பறையறைவித்துக் கொள்ளுகிறார், முதலமைச்சர் காமராசர் அவர்கள்!

அரசியல் உலகில் ஏற்படும் மாட்சியும் வீழ்ச்சியும், உயர்வும் தாழ்வும், நீர்மேல் குமிழி போன்ற ஒன்றாகும். மாமேதை ஸ்டாலின் பெற்றிருந்த அதிகாரத்தையும், தாங்கி இருந்த பெரும்புகழையும்விடவா இனி, ஒருவர் இவ்வுலகில் பெற்றுவிடப் போகிறார்? இன்று, அவர் நிலை என்ன?

சில ஆண்டுக்காலம் முன்வரை உலக மதிப்புக்குப் பாத்திரமாக இருந்த, சீன சர்வாதிகாரியான சியாங்-கே-ஷேக், இன்று எந்நிலையில் இருக்கிறான்? அவன் புகழ் பரப்பி வாழ்ந்த நேரத்தில் கட்டி அணைத்து பாராட்டுரை வழங்கிய அதே பண்டித நேருதானே, அவனை மறந்து சூ-என்-லாயிடம் கொஞ்சிக் குலாவுகிறார்? அரசியல் அதிகாரம் ஒன்றை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு உருவாகி வளரவும் தேயவுமாக உள்ள ஒரு அந்தஸ்தை உறுதியானது எனக் கொள்ளும், கனம் காமராசர் போன்ற உண்மை அறிவு வாய்க்கப் பெறாதவர்கள், எம் கழகத் திருக்கூட்டத்தில் அறவே இல்லை என்பதை, அம்முடத்தெங்கு உணர்ந்து கொள்ளவேண்டும்!

கல்லா நிலையில் உள்ள காமராசர் போன்ற ஒருவர், 'சோட்டா நேரு' எனப் பாவைக் கூத்தாடி வரும் போது, அரசியல், பொருளியல், வரலாற்று இயல் அனைத்திலும் சிறப்பாக மக்கள் உளஇயல் நன்கு பயின்றுள்ள எம் தலைவர்கள், 'சோட்டா நேரு' என்ன,. அவருக்கும் பன்மடங்கு உயர்வாகவும் விளங்க விழைவதில், குறை என்ன கண்டார், இக்குறைமதி படைத்தக் குணக்கேடர்?

முதலமைச்சர் காமராசர் அவர்களை, நாம் 'வடநாட்டுக் கங்காணி' என்கிறோமாம்! அதன் பொருள் அவருக்கு விளங்கவில்லையாம்!

ஐயோ! பாவம்! மற்ற பொருட்கள் அனைத்தும் இந்தக் கனத்துக்கு விளங்கி விட்டது! கங்காணி என்ற சொல்லின் பொருள்தான் இவருக்கு விளங்காமல் இருக்கிறது!

'வடநாட்டுக் கங்காணி' என்றக் குற்றச்சாட்டிற்கு உட்பொருள் தெரியாதவராகவே கனம் இருப்பாரானால், பிரிட்டிஷ் ஆட்சியில் தலைமுறைத் தலைமுறையாகக் கங்காணி வேலை செய்தவர்கள் என்றக் குற்றச்சாட்டை நம்மீது, அவர் ஏவாது இருக்க வேண்டும்.

அப்பொழுதுதான், 'கங்காணி' என்ற சொல்லுக்குரிய உட்பொருளை உண்மையிலேயே அவர் அறிந்திலர் என்பதை, நாம் மட்டும் அல்ல, மற்றவரும் ஒப்புவர். ஆனால், முதலமைச்சரோ, பிரிட்டிஷார் ஆட்சியில் கங்காணி பணிபுரிந்தோம் என்றக் குற்றச்சாட்டை நம்மீது உமிழ்கிறார்!

அவர் கூற்றிலிருந்து விளங்குவது என்ன? 'வடநாட்டுக் கங்காணி' என்றக் குற்றச்சாட்டின் உட்பொருள், கனம் காமராசர் அவர்களுக்கு விளக்கமாகவே தெரிந்திருக்கிறது என்பதாகும்.

அவர், நம்மீது சாட்டும் 'கங்காணிக்' குற்றத்தை நாம் மறுத்துரைப்பதற்குமுன், நாம் அவர் மீது சாட்டுவதாக அவரே குறிப்பிடும் 'வடநாட்டுக் கங்காணி' என்றக் குற்றச்சாட்டை, அவர் மறுத்துரைக்காததால், அதை முழுதும் ஒப்புகிறார் என்ற உண்மையை முதலில் எடுத்துக் காட்டி உறுதிபடுத்துகிறோம். நாம் கங்காணி பணி புரிந்தோமே இல்லையோ, கனம் காமராசர், தாமே கூறுவது போல் 'வடநாட்டுக் கங்காணி'யாக இருந்து வருகிறார் என்பது விளக்கமாகி விட்டது. அவர் திருவாயினாலேயே, தமது உண்மையான பணியின் தன்மை ஒப்புக்கொள்ளப்பட்டு இருப்பதற்காக, நாம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். வீழ்க 'கங்காணிகள்'!

## நெல்லூரில் அணுசக்தி மூலப் பொருள்

### மூடப்பட்ட சுரங்கத்திலிருந்து கிடைக்கிறதாம்

கர்னூல், ஏப். 15—

நெல்லூர் மாவட்டத்தில் இயங்கிகொண்டிருந்த அப்பிரகச் சுரங்கம், இலாபகரமானதாக இல்லை என்று சில ஆண்டுகளுக்கு முன் மூடப்பட்டது. ஆனால் இப்போது அந்தச் சுரங்கப் பகுதியில், ஏராளமான யுரேனியம் கிடைக்குமென கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

'சங்கரா அப்பிரகச் சுரங்கம்' என்ற அந்தச் சுரங்கத்தில், கடந்த செப்டம்பர் திங்கள் முதல், மாதம் ஒன்றுக்கு ஒரு டன் வீதம் 16 சதவிகிதம் யுரேனியமுடைய 'சாமரிஸ் கைட்' என்ற கனிப்பொருள் தோண்டி எடுக்கப்படுகிறது என்றும் தெரியவருகிறது.

இந்த யுரேனியத்தை டில்லி சர்க்கார் வாங்கிக்கொள்கிறார்கள். அவர்கள் மட்டுமே இந்த அணு சக்தி மூலப் பொருளை வாங்கிச் சேகரிக்க முடியும்.

## அமெரிக்க அணுசக்தி நிபுணர்கள்

### பாகிஸ்தானுக்கு வருகின்றனர்

கராச்சி, ஏப். 14—

மேலும் அதிக பாகிஸ்தானியர்களை அணுசக்தி விஞ்ஞானிகளாக்குவதற்கும், அவர்களுக்கு அதற்குரிய பயிர்சித் தருவது குறித்தும் பாகிஸ்தான் அணுசக்திக் குழுவுடன் விவாதிக்க அமெரிக்க அணுசக்தி நிபுணர்கள் கராச்சிக்கு வருவாராம்.

பாகிஸ்தானுக்கு ஒரு அணு உலையை அமெரிக்கா வழங்க இருப்பது நினைவிருக்கலாம்.

## அணுசக்தி மூலம் இயங்கும் விமானங்கள்!

இரண்டு ஆண்டுகளில் அணு சக்தி மூலம் பறக்கும் விமானங்கள் கட்டப்பட்டு விடுமாம்!

முதல் அணுசக்தி விமான இயந்திரம் 1958-ல் நடைமுறையில் அமுலாகக் கூடுமென நம்பப்படுகிறது.

## டில்லியின் தாராளம்!

### மிகப் பிரம்மாண்டமானதோர் தொழிற்சாலை!

### சென்னையில் நிறுவ கடன் தருகிறது!

புதுடில்லி, ஏப். 15—

அப்பளம்—இப்போது மக்கள் சபையில் அடிபடுகிறது!

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சென்னை சர்க்கார் மிகப் பிரம்மாண்டமானதோர் (!) தொழிற்சாலையைத் துவக்கத் திட்டமிட்டிருக்கிறார்களல்லவா?

அந்தப் பெரிய அப்பளம் உற்பத்தித் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக; டில்லி சர்க்காரிடம் கடன் கேட்டார்களாம்; டில்லி சர்க்காரும் மனமுவந்து, தென்னாட்டுத் தொழில் வளர்ச்சியில் நாம் அக்கறை காட்டவில்லை என்று கூவுவோரின் வாயை அடக்க வேண்டாமா என்று கேட்பதுபோல, கடனும் தந்துவிட்டார்களாம்—அப்பளத் தொழிற்சாலை ஆரம்பிக்க!

அப்பளத் தொழிற்சாலைக்காக, சென்னைக்கு ரூ. 13,096 டில்லி கடன் தந்திருக்கிறதாம்!

பெருமையோடு அறிவிக்கப்படுகிறது—மக்கள் சபையில், மந்திரி ஒருவரால்!

கதிலிங்கண்ண கவுடா என்பார், 'நேரு மார்க் அப்பளம் என்பது போல, எத்தனையோ 'மார்க்' அப்பளங்கள் விற்கப்படுகின்றன; இப்போது கடன் வழங்கப்பட்டிருப்பது, எந்த 'மார்க்' அப்பளத்தை பிரபலப்படுத்துவதற்காக?' என்று சிரிப்பிற்கிடையே கேள்வி ஒன்றை எழுப்பினாராம்.

'நல்ல அப்பளம் உற்பத்தி செய்ய—அது ஒரு நல்ல பதார்த்தம் என்பதைப் பிரபலப்படுத்த—நடுத்தர வருமானமுடையவர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு வேலைதர — இத்யாதி காரணங்களுக்காகத்தான் இந்தக் கடன் தரப்படுகிறது' என்று மந்திரி பதில் கூறி யிருக்கிறார்.

'வெளிநாடுகளுக்கு அப்பளம் ஏற்றுமதி செய்யப்படுமா?' என்று கேட்கப்பட்டபோது, அந்த மந்திரி, 'இல்லை; இந்தியாவில் மட்டுமே பிரபலப்படுத்தப்படும்' என்று கூறியிருக்கிறார்.

அப்பளம் தொழிற்சாலையில் உற்பத்தியாகப் போகிறது. அதுவும், அம்மாமி அப்பளம் என்றால், இன்னும் விசேடமல்லவா? வேறென்ன?

## சிறு தொழில்களுக்கு ஊக்கமளிக்க!

### சென்னை சர்க்கார் திட்டம்

கோவை, ஏப். 13—

சென்னை, கோவை, கோழிக்கோடு, சிவகாசி ஆகிய இடங்களில் ஆண்டிற்கு ஒரு தொழில் 'எஸ்டேட்' வீதம் நிறுவ சென்னை சர்க்கார் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

சென்னை தொழில் 'எஸ்டேட்'டில் 140 தொழிற்சாலைகள் அடங்கியிருக்கும். ஏனைய தொழில் எஸ்டேட்'டுகளில் 100 தொழிற்சாலைகள் இருக்கும். இந்தத் தொழில் 'எஸ்டேட்'டுகளுடன் இணைப்பாக 'சர்வீசிங் கார்ப்பரேஷன்'களை அமைக்க அரசியலார் தீர்மானித்துள்ளனர்.

சிறு தொழில்களுக்கு ஊக்கமளிப்பதற்காகவே இந்த 'எஸ்டேட்'டுகள் நிறுவப்படுகின்றனவாம்.

## ரூ. 2 கோடி செலவில்!

### சென்னை மாவட்டத்தில் பால் பண்ணை நிறுவப்படும்!

சென்னைக்கு வெளியே ரூ. 2 கோடி செலவில் பால் பண்ணைகளை நிறுவ 2-வது திட்டத்தில் சர்க்கார் வழிவகை செய்திருப்பதாக, சென்னை சுகாதார அமைச்சர் கூறியுள்ளனர்.

# 100 கோடி கெஜம் துணிக்கான நூல் உற்பத்திக்கு

# ரூ. 80 கோடி உதவியா?

"அம்பர் சர்க்கா மூலம் 100 கோடி கெஜம் துணிக்குத் தேவையான நூல் உற்பத்தி செய்ய வேண்டுமானுல், சுமார் 80 கோடி ரூபாய் அம்பர் சர்க்காவிற்காக மானியம் வழங்கவேண்டி வரும்"

என்று நிதி மந்திரி தேஷ்முக் கணக்கிட்டுக் கூறியிருக்கிருர்.

"விஷயங்களைப் பொருளாதாரக் கண்ணேட்டத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு—சில உபயோகப் பொருள்களுக்காக, குறிப்பாக இது போன்ற ஒருவகை நூல் உற்பத்திக்காக மட்டும்—இவ்வளவு பெரிய உதவித் தொகை வழங்குவது, உண்மையிலேயே நாட்டு நலனுக்கு உகந்ததுதானு என்ற சந்தேகம் எழுகிறது"

என்றும், அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

★

## அம்பர் ராட்டை ஏராளமானேருக்கு வேலை தருமாம்!

புதுடில்லி, ஏப். 13—

"அம்பர் ராட்டை ஏராளமானேருக்கு வேலைதரக்கூடியது; நெசவாளர்கள் அதை ஏற்கும்படிச் செய்யவேண்டும்; அவ்விதம் செய்தால், பெரும் பிரச்சினைகள் தீர்ந்துவிடும். இதில் பின்னடைந்து, பின்வாங்க இடமின்றி மிகவும் முன்யோசனையுடன் முடிவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்,"

என்று, புதுடில்லியிலுள்ள கதர், கிராம உத்தியோக பவனத்தின் முதலாண்டு விழாவில் நேரு கூறியுள்ளாராம்.

## காளிதாசனுக்கு நினைவுச் சின்னம் நிறுவப்படும்

ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்படும்

நாகபுரி, ஏப். 14—

காளிதாசனுக்கு நினைவுச் சின்னம் ஒன்று நிறுவுவதற்கு பிரிஜ்லால் பியானி என்பவர் தலைமையில் மாநில சர்க்கார் ஒரு குழு நியமித்துள்ளனராம். இதற்கென இவ்வாண்டு வரவு-செலவுத் தொகையில் ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

ராம் தேக்கில் அந்நினைவு மண்டபம் கட்டப்படுமாம், அவ்விடத்தில்தான் 'மேக தூது' என்ற காவியத்தை இயற்றுவதற்கு காளிதாசன் ஊக்கம் பெற்றதாக ஒரு வதந்தி நிலவுகிறது.

★

## 'கதருக்குத் தரப்படும் உதவித் தொகை நிரந்தரமானதல்ல'

## 'உறுதியும் விலை மலிவும் வாய்ந்தால்தான் அம்பர் நூல் விலைபோகும்'

'வளர்ந்துவரும் இயந்திர நுண்ணியல் வளர்ச்சிக்குக் கண்ணை மூடிக்கொள்ள முடியாது'

## அம்பர் சர்க்கா, கதர்த் தொழில் குறித்து நேரு

"பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, கதரின் எதிர்காலம் எப்படி இருக்குமெனக் கூறுவது கடினமாகும். விலையைப் பொருட்படுத்தாமல், ஒரு கூட்டம் எப்பொழுதும் கதரையே உடுத்திவருகிறது. மக்களில் பெரும்பான்மையினர் கதரை உடுத்த வேண்டுமானுல், அது விலையில் குறையவேண்டும்.

"இவ்விலை மலிவு உதவித் தொகை மூலம் செயல்படுத்த முடியும். ஆனுல் உதவித் தொகையோ, ஒரு தொழிலை, தன் காலால் நிற்கவைக்கக்கூடிய நிலையை உருவாக்குவதாக இருக்க வேண்டும். உதவித் தொகை, நிரந்தரமானதாக இருக்க முடியாது.

'கதரின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில், அம்பர் சர்க்கா ஒரு சிறு பகுதி பதிலளிப்பதாக இருக்கிறது. அம்பர் சர்க்காவில் உற்பத்தி செய்யப்படும் நூலை எந்த அளவில் நெசவாளர்கள் பயன்படுத்த முன்வருகிருர்களோ, அந்த அளவிற்குச் சந்தையை கதர் கைப்பற்றக்கூடும். அம்பர் நூல் உறுதியும், விலை மலிவும் வாய்த்ததாக இருந்தால், ஆலை நூலுக்குப் பதில் அம்பர் நூலைப் பயன்படுத்த நெசவாளர்கள் முன்வருவர் என்பது உறுதியாகும்.

"இன்றைய உலகத்தில் இயந்திர முன்னேற்றம் ஒரு அடிப்படை உண்மையாகும். புதிய சக்தியான அணுசக்தியின் காரணமாக, வெகு துரிதத்தில் உலகம் மாறிக் கொண்டு வருகிறது. அந்தச் சக்தி, சமுதாயத்தைப் புரட்சி மயமாக்கி விட்டிருக்கிறது. தொழில் துறையில் நுழைந்துள்ள, விரிவுடைய மிக மிக விரைவான இயந்திர நுண்ணியல் வளர்ச்சிகளில் இந்தியா கண்மூடிக் கொள்ளக் கூடாது."

—கதர், மற்றும் 'கிராமோதய பவன்' ஆண்டுவிழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் பிரதமர் நேரு இவ்வாறு குறிப்பிட்டிருக்கிருர்.

## பல்லாயிரம் புதிய டெலிபோன்கள்

சென்னை நகரில் அமைத்துத் தர ஏற்பாடுகள்

புதுடில்லி, ஏப். 15—

இன்னும் மூன்ருண்டுகளுக்குள்ளாக, 11,850 புதிய டெலிபோன்கள், சென்னை நகரில் அமைப்பதற்கான விரிவான திட்டம் ஒன்றை மத்திய தபால் - தந்தி இலாகா தயாரித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இப்போது, சென்னை மாவட்டத்தில், நேரடியாகப் பொருத்தப்பட்டுள்ள டெலிபோன் தொடர்புகளின் எண்ணிக்கை 7,243 என்றும், இது 1956 ஜனவரி 1-ந் தேதிய கணக்கு என்றும், 1948-ல் இந்த எண்ணிக்கை 3,965-ஆக மட்டுமே இருந்தது என்றும் தெரியவருகிறது.

## 'எல்லா ஜனநாயக சக்திகளையும் ஒன்றுபடுத்த வேண்டும்'

## கம்யூனிஸ்டுகளின் புதிய கொள்கை?

பாலக்கோடு, ஏப். 13—

காங்கிரசிற்கு உள்ளும் புறமும் உள்ள நாட்டுப் பற்றுள்ள எல்லா ஜனநாயக சக்திகளையும் ஒன்றுபடுத்தி ஒரு ஐக்கிய முன்னணி அமைப்பதற்கான வழிவகைகளை வகுப்பதுபற்றி கம்யூனிஸ்டு கட்சியின் நான்காவது மாநாடு விவாதிக்கும் என்றும், அம்மாதிரிச் செய்வதின் மூலம், கடந்த காலத்தில் புகழ்வாய்ந்திருந்த நமது நாடு மேலும் இப்போது புகழ்பெற்று முன்னேறுவதற்கு வழிகாண முடியும் என்றும் அகில இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளரான தோழர் அஜாய் குமார்கோஷ் இங்கு தெரிவித்திருக்கிருர். மாநாடு அடுத்த கிழமை துவங்கவிருக்கிறது.

## 7,500 பேர் கைது

பீகார்—வங்கம் இணைப்பை எதிர்த்து கடந்த ஏழு வாரமாக நடைபெற்று வரும் இயக்கம் சம்பந்தமாக இதுவரை 7,5000 பேர்களுக்கு மேல் கைது செய்யப் பட்டுள்ளனராம்.

★

## காங்கிரஸ் எதேச்சாதிகாரிகளுடன் கம்யூனிஸ்டுகள் 'கள்ள உறவு?'

## கண்காட்சியில் டில்லியின் பங்கு!

## பாலக்கோடு மாநாட்டில்புதியஅரசியல்கூத்து?

கம்யூனிஸ்டுக் கட்சி மாநாடு பாலக்கோடில் நடைபெறவிருப்பதை ஒட்டி ஒரு கண்காட்சியும் ஏற்பாடாகியுள்ளது. அந்தக் கண்காட்சியில் பெரும் பகுதியை, டில்லி சர்க்கார் அடைத்துக் கொள்கிருர்களாம்.

அந்தக் கண்காட்சியில் டில்லி சர்க்கார், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து விளக்கம் தரும் படங்கள், கண்காட்சிப் பொருள்கள் முதலியவற்றை எல்லாம் பரப்பி வைத்து விளம்பரம் செய்யப்போகிருர்களாம்.

மாநாடு 19-ந் தேதி துவங்குகிறது என்ருலும், 15-ந் தேதியே கண்காட்சி துவங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கண்காட்சியில் சென்னை சர்க்காரும் பங்கு பெறுகிருர்களாம்

மாநாட்டில், நடனங்கள், நாடகங்கள், இசையரங்குகள் முதலிய கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம் பெறுமாம்.

## அநீதிக்கு முற்றுப்புள்ளி!

ஹில்ஸ்பரோ, (அமெரிக்கா) ஏப். 13—

சென்ற இரண்டு ஆண்டுகளாக அனுமதி மறுக்கப்பட்டுவந்த 24 நீக்ரோ குழந்தைகள் வெண்டக் வாஷிங்டன் ஆரம்பப் பள்ளியில் அனுமதிக்கப்படுவார்கள் என்று ஹில்ஸ்பரோ கல்வி 'போர்டு' அறிவித்ததாம்.

**************************************

# திராவிட வரலாற்றில் ஒரு திருப்புமுனை!

★ திராவிடம் வளம் பெறவும்
★ திராவிடர் நலம் பெறவும்
★ அதற்கான திட்டம் தீட்டி செயல்படுத்தவும்

## மே 17, 18, 19, 20 தேதிகளில்

# திருச்சி

பந்தயத் திடலில்

('ரேஸ் கோர்ஸ்' ஜமால் முகம்மது கல்லூரி அருகில்)

## தி. மு. கழக 2-வது

# மாநில மாநாடு

நடைபெறும்

★

பொதுச் செயலாளர்

## இரா. நெடுஞ்செழியன்

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும்

நாட்டு விடுதலை குறித்து நல்லுரை ஆற்றுவர்

★

எழுச்சியூட்டும் நாடகங்கள்—இன்னிசை விருந்து—ஓவியக் காட்சி ஆகிய சிறப்புகளும் உண்டு

★

## திரண்டு வாரீர் தோழர்களே!

—வரவேற்புக் குழு

**************************************

## கொள்கைகளை வகுத்துக் கொள்ளும்?

திருச்சூர், ஏப். 18—

கம்யூனிஸ்டு கட்சி மாநாடு, மாறியுள்ள சூழ்நிலைகளுக்கு ஒப்ப எப்படி, தன் கொள்கைகளை வகுத்துக்கொள்வது என்பதை தீர்மானிக்கும்.

'சோஷலிச சமூகத்தை சமாதானவழிகள் மூலம் அடைய வேண்டும் நிறுவவேண்டும் என்பதே மக்கள் விருப்பமாயுள்ளது என்று, சோவியத் கம்யூனிஸ்டு கட்சி மாநாடு தீர்மானித்திருக்

(4-ம் பக்கம் பார்க்க)

**************************************

# மாநில மாநாடு

## பிரதிநிதிகள் தேர்வு

மே 17, 18, 19, 20-ந் தேதிகளில் திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது குறித்துக் கீழ்க்கண்ட விளக்கம் தரப்படுகிறது:—

ஒவ்வொரு கிளைக் கழகங்களிலிருந்தும், செயலாளர், மற்றுமொரு உறுப்பினர் ஆக இருவர் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

மாவட்டக் குழுக்களைப் பொறுத்தவரையில், அதன் எல்லா உறுப்பினர்களுமே பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளும் உரிமை பெற்றவர்களாவர்.

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்புக்குழு உறுப்பினர்களாகவும், பிரதிநிதிகளாகவும் கலந்து கொள்ளும் உரிமை பெற்றுள்ளனர்.

எனவே, இவ்விளக்கத்திற்கேற்ப எல்லாக் கிளைகளும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அதன் விவரத்தையும், பிரதிநிதி ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாய் விதம் கட்டணமும் கிளைக் கழகச் செயலாளர் கையொப்பமுடன், ஏப்ரல் மாதம் இறுதிக்குள், 'தோழர் அம்பில் தர்மலிங்கம், வரவேற்புக் குழுத் தலைவர், தி. மு. க. மாநில மாநாடு, 9, கிலேதார் தெரு தெப்பக்குளம், திருச்சி' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

'அறிவகம்'
சென்னை-13
11—4—56

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

**************************************

# வங்க-பீகார் இணைப்பு நாடகத்தில் புதிய காட்சி!

## டாக்டர் ராய் அமைத்துத் தருகிறார்

### கதை—வசனகர்த்தாவின் கருத்து என்ன?

புதுடில்லி, ஏப். 16—

மேற்கு வங்கத்தையும்—பீகாரையும் இணைக்கப்போகிறோம் என்று ஒரு நாடகம் ஆடினார்களல்லவா? அந்த நாடகத்தின் ஒவ்வொரு காட்சியும் முன்னுக்குப்பின் முரணானதாக—கேலிக் குரியதாக ஆகிவருகிறது.

அந்த இணைப்பு நாடகத்தின் முதல் கட்டத்தின் கர்த்தா நேரு; அவர் எழுதித் தந்த அறிக்கையில், சின்ஹாவும்—ராயும் கையெழுத்துப் போட்டதுதான் முதல் காட்சி.

அந்த முதல் காட்சியின் அதிகாரத்தையே மேற்கு வங்க மக்கள் எதிர்த்துப் போராடி வருகின்றனர்.

அந்த எதிர்ப்பு வலுத்து வருவது கண்டு, காட்சிகள் வேகமாக மாறி வருகின்றன; இணைப்பு நாடகம் உருமாறி வருகிறது.

இந்த இணைப்பு நாடகத்தைக் காட்டி மொழிவழி மாநிலம் கோருவோர் வாயை மூடிவிட எண்ணிய டெல்லி ஏகாதிபத்திய வாதிகள், இப்போது என்ன செய்யப் போகிறார்களோ, தெரியவில்லை?

மேற்கு வங்கம்—பீகார் இணைப்பு என்பதற்குப் பதிலாக, இப்போது டாக்டர் ராய் ஒரு யோசனை கூறியுள்ளாராம்.

அதாவது, இரண்டு மாநிலங்களும் தனித் தனியாகவே, தனித் தனி அந்தஸ்துகளுடன் இயங்குவது; ஆனால், இரண்டிற்கும் பொதுவான பிரச்சினைகளை விவாதிக்க மட்டும் ஒரு 'பெடரல்' சட்டசபை அமைப்பது; இந்தப் 'பெடரல்' சட்டசபை அமைந்தாலும் இரண்டு மாநிலங்களும் தங்கள் தங்கள் விவகாரங்களை கவனித்துக்கொள்ள தனித் தனிச் சட்ட சபைகளை, இப்போது உள்ளது போலவே வைத்துக்கொள்வது; இந்தத் திட்டத்திற்கு பீகார் — மேற்கு வங்க ஐக்கிய 'மாநிலங்கள்' என்று பெயரிருப்பது' என்பதுதான், டாக்டர் ராயின் திட்டம்.

இது குறித்து பரிசீலிக்க 15-நாள் அவகாசம் வேண்டுமென சின்ஹா கோரியிருக்கிறாராம்.

இரண்டு மாநில முதன் மந்திரிகள், பண்டித பந்த், மௌலானா ஆசாத், மற்றும் அதிகாரிகள் முதலானோர் கூடி, பீகார்—வங்க இணைப்பு நாடகத்தின் அடுத்த காட்சி என்ன என்பதைக் குறித்து விவாதிக்க முற்பட்ட போதே, இந்தப் புதிய காட்சி பற்றிய விளக்கத்தை டாக்டர் ராய் அளித்தாராம்.

'இணைப்பு நாடக'த்தின் கதை—வசனகர்த்தாவான நேரு பெருமான், இந்தப் புதிய காட்சி பற்றி இன்னும் கருத்தறிவிக்கக்காணோம்.

### 'பெல்லாரியை ஆந்திராவுடன்தான் இணைக்க வேண்டும்'

புதிதாக அமையப்போகும் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் பெல்லாரியை இணைக்கவேண்டும் என்று, மாநில புது அமைப்புக் குழுவின் சிபாரிசைச் சுட்டிக் காட்டி, தெலிங்கானா பிரதேசத்தைச் சேர்ந்த ஐதராபாத் சட்ட சபை உறுப்பினர்கள் 70 பேர் கையெழுத்திட்டு, டெல்லிக்கு அனுப்பிவைத்திருக்கின்றனராம்.

## கழகக் கூட்டம்

★

முத்துப்பேட்டை:

(ஏ. எஸ். என். திடலில்)

19—4—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
ந. தருமலிங்கம்
இரா. நடராசன்

## நிதிக் காட்சி

★

ஏழை விதவைகள் கைத் தொழில் நிதிக்காக தோழர் கண்ணதாசன் தலைமையில், 22—4—56 காலை 9 மணிக்கு பேரம்பூர் மகாலட்சுமி தியேட்டரில், 'பணம்' என்ற படக் காட்சி நடைபெறும். அது போது, மேடைமீது பிரபல திரைப்பட நட்சத்திரங்கள் தோன்றுவர்.

# இரு மொழி மாநில அமைப்பிற்கு பெரும் எதிர்ப்பு

## மேற்கு வங்க மக்களின் மாபெரும் போராட்டம்

மேற்கு வங்கத்தையும், பிகாரையும் இணைக்கும் திட்டத்திற்கு எதிராக கடந்த ஏழு வார காலமாய் மேற்கு வங்க மாநிலத்தில் பெரும் கிளர்ச்சிகள் நடைபெற்றுவருகின்றன. இந்த ஏழு வாரத்தில் மட்டும் சுமார் 7,500 பேர் வரை, கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

கல்கத்தாவில் கடந்த பிப்ரவரி 24-ந் தேதி கடையடைப்பு, அர்த்தால் என்று துவங்கிய இந்தப் போராட்டம் இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது. இணைப்பு யோசனை முழுவதுமாகக் கைவிடப்படும் வரை இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

கல்கத்தா நகரில் மட்டும் 2,171 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், இவர்கள் எல்லாம், இணைப்பிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது என்று விதிக்கப்பட்ட 144 தடையை மீறிக் கிளர்ச்சி செய்தனர் என்றும் தெரியவருகிறது.

மாநிலத்தில் சுமார் 33 இடங்களில் இந்த இரு மாநில இணைப்பு எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது என்று தெரியவருகிறது.

## சென்னை கிளைக் கழகங்களுக்கு:

★

13—4—56ல் கூடிய மாவட்டக் குழு நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, ஏப்ரல் இறுதிக்குள், கிளைக் கழகங்கள், மாநில மாநாட்டிற்கான தீர்மானங்களை மாவட்டக் கழகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

"ஒவ்வொரு கிளைக் கழகமும் நான்கு பிரதிநிதிகளை மாநாட்டிற்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். வட்ட மாவட்டப் பிரதிநிதிகள் இருவரும், கிளையின் செயலாளரும் நீங்கலாக இன்னொரு உறுப்பினரை உடனடியாகச்செயற் குழுவைக் கூட்டி தேர்ந்தெடுத்தனுப்ப வேண்டும்.

"வட்டக் கிளையின் பெயர் பொறித்த கொடிகளை மாநில மாநாட்டிற்கெனப் புதிதாக இன்றே தயார் செய்து கொள்ளவும்.

"பிரதிநிதிகள், ரூபாய் ஐந்தை மாநில மாநாட்டு முகவரியாகிய திருச்சிக்கு அனுப்பி, முன்னதாகவே இரசீதைப் பெற்றுக்கொள்ளவும்.

"ஒவ்வொரு கிளைக் கழகமும், எத்தனை பேர் மாநாட்டிற்குச் செல்லுகிறார்கள் என்ற குறிப்பை உடனடியாக மாவட்டக் கழகத்திற்குத் தெரிவிக்கவும்.

'சென்னையிலிருந்து திருச்சிக்கு தனி புகைவண்டி விடும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

## டெல்லி சர்க்காரின் கல்விக் கொள்கை

### எல்லாப் பள்ளிகளும் ஆதாரக் கல்விச்சாலைகளாக வேண்டுமாம்!

ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளை நடத்துவதற்காக செலவிடப்படும் தொகையில் 60 சத விகிதத்தை பல்வேறு மாநிலங்களுக்கும் டெல்லி சர்க்காரே தந்து வருகிறது; தொடர்ந்து, இந்த நிதி ஆண்டிலும் அந்த உதவியை டெல்லி சர்க்கார் செய்யும் என்று தெரியவருகிறது.

எல்லாப் பள்ளிகளையும் இரண்டாம் திட்டக் காலத்திற்குள் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளாக்கிவிட வேண்டுமென்பது டெல்லி சர்க்காரின் கொள்கையாம். இதற்காக ஆதாரக் கல்வி போதிக்கத் தேவையான ஆசிரியர்களை வேகமாகப் பயிற்றுவிக்க வேண்டியது அவசியமாகிறதாம்.

## கச்சா தீவு பிரச்சினை

### தகராறுக்கு இடமில்லை?

"பாக். ஜலசந்தியில் தனுஷ்கோடிக்கும்—தலைமன்னாருக்குமிடையேயுள்ள சின்னஞ்சிறு கச்சா தீவு குறித்து இந்திய—இலங்கை சர்க்கார்கள் தகராறு செய்து கொள்ளும் பிரச்சினையே இல்லை. இப்பிரச்சினையில், நமக்கு அண்மையிலுள்ள நாடான இலங்கையுடன் 'தேசிய கௌரவம்' பாராட்டுவதற்கில்லை" என்று, பிரதமர் நேரு மக்கள் சபையில் கூறியுள்ளார்.

## காமராசர் பாட்டுக்கு.......

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

கரியை, "மேற்கு ஜெர்மனியிலும் ஸ்காண்டிநேவியின் நாடுகளிலும் பயன்படுத்துவது போன்றுவது பயன்படுத்த வேண்டும் என்றும், சி. பி. ஆர். மேலும் குறிப்பிட்டார்.

குறிப்பு:—தெற்கில் கனரகத் தொழில்கள் நிறுவப்படவில்லை எனக் கூறுவது பெரும்பொய்; அதைக்கேட்டு தமிழ் மக்கள் ஏமாறக்கூடாது' என்று முதலமைச்சர் கனம் காமராசர் அவர்கள் சில நாளைக்கு முன் சேலத்தில் கூறினார். அந்தக் கனம், சி. பி. இராமசாமி அவர்கள் கூறும் குற்றச்சாட்டிற்கு என்ன பதில் சொல்லப் போகிறதோ?

## கொள்கைகளை வகுத்து...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கிறது,' என்று தோழர் ஏ. கே. கோபாலன் தெரிவித்திருக்கிறார்.

ஐந்தாண்டுத் திட்டமும், மாநாடு விவாதிக்கும் முக்கியமான விஷயங்களுள் ஒன்றாக இருக்கும். திட்டத்தின் அம்சங்கள் பலவற்றை கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது; ஆனால் திட்டத்திற்கான பணம் சேகரிப்பதில் ஆளும் கட்சிக்கும்—கம்யூனிஸ்டு கட்சிக்கும் அடிப்படையான வேறுபாடுகள் உண்டு.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் தேசிய வருமானம் அதிகரித்திருப்பது உண்மையே; இரண்டாம் திட்டத்திலும் இன்னும் அதிகரிக்கும்; ஆனால், இந்த வருமானம் சாதாரண மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யப்பட வேண்டும்.

## திருக்குறள் வகுப்பு

18—4—56 மாலை 6 மணிக்கு, சென்னை—புரஸ்சபாக்கம், எண் 100, வெள்ளாளத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

# 'கலாச்சாரம் என்ற பெயரால் பிற நாடுகளுக்கு நாட்டியமாட செல்வதா?

## 'இருபது பேர் கொண்ட குழுவிற்குச் செலவு ரூ. இரண்டரை இலட்சமா?

## 'இதற்காக ஒரு துணை அமைச்சர் வேறு வெளி நாடுகளுக்குச் செல்வதா?'

## கலாச்சார தூதுக்குழுக்கள் குட்டை அவினாசி உடைக்கிறார்

"நாம் பண்பாடு பற்றிய உணர்வை வளர்த்து வருகிறோம். பண்பாடு குறித்து பேசும்பொழுதெல்லாம் நாம் பெரிதும் நடனத்தைப் பற்றியே குறிப்பிடுகிறோம்.

"கலாச்சார தூதுக் குழுவிற்காக நாம் பெரும் தொகையைச் செலவழிக்கிறோம். 20 நபர்களை மட்டுமே கொண்ட ஒரு கலாச்சார தூதுக் குழு அண்மையில் தென்கிழக்கு ஆசியப் பகுதிகளுக்குச் செல்ல இருக்கிறது. அதற்காக ரூ. 2,30,000 செலவிடப்பட இருக்கிறது என்பது உண்மையா எனத் தெரிய வேண்டும். அத்தூதுக்குழுவின் கலைப் பணியை நான் கண்டேன். அதற்காகச் செலவிடப்பட இருக்கும் தொகையில் அறிவுடைமை எதுவும் இல்லை என்ற முடிவிற்கே வந்தேன்.

"பண்பாடு தூதுக் குழு அவசியமானதுதான். அதற்காக வெறும் நாட்டியம் ஆடிக் காட்டுவதற்காக, துணை அமைச்சர் தலைமையில் ஒரு தூதுக்குழு செல்லுவது, பெருத்த வகையில் விரயமாகும். இதில் ஒரு சிறு திருத்தம் செய்து கொள்ளலாம் எனக் கருதுகிறேன். பண்பாடு நல்லது; ஆனால் நாட்டியம் ஆடுவது பண்பாடாகி விடாது."

என்று மக்கள் சபையில், தென்னூட்டு உறுப்பினர் டி. எஸ் அவினாசிலிங்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# மக்கள் மன்றத்தில் சம்பத்

## துணைப் பொதுச்செயலாளர் பேருரைகள்

சென்னை பெத்துநாயக்கன் பேட்டை மக்கள் மன்றத்தின் சார்பில் 16-4-56 மாலை 6 மணியவில், காசிவிசுவநாதர் கோவில் முன்பாக ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

ஏராளமான தாய்மார் உட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

தோழர் சி. எஸ். கணேசன் தலைமை வகித்து, மக்கள் மன்றத்தின் செயல் முறைகளைக் கூறினார்.

அடுத்து, தோழர் சி. ஆர். பாலசுந்தரம் சிறிது நேரம் பேசியதும் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தற்கால அரசியல் நிலைகள் குறித்து விளக்கம் தந்தார்.

இறுதியாக தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், அரியதோர் சொற்பெருக்காற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

இருவேறு மன்றங்கள் சார்பில் தோழர் சம்பத் அவர்கட்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

(சொற்பொழிவு நாளை வெளிவரும்)

# இந்தி ஆட்சி மொழியாகும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பரப்பும் பொறுப்பு இப்போதுள்ள அமைச்சிடமே இருந்து வருமானால், அமைச்சுத்துறையை முழுதும் திருத்தம் செய்ய வேண்டும். நாட்டுக்குச் செய்யவேண்டிய கடமையை அமைச்சு செய்யவில்லை. நாட்டின் விருப்பத்திற்கு மாறாக அமைச்சு நடந்து கொள்ளுகிறது."

இந்தி மொழி வெறியரான புருஷோத்தமதாஸ் தாண்டன், அவிநாசிலிங்கம் அவர்களின் அறிவுரையை எதிர்த்து, மக்கள் சபையில் மேற்குறித்தவாறு கூச்சலிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.